# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, கண்டி அஸ்கிரிய பலிபான ஸ்ரீ சந்தானந்த சர்வதேச பௌத்த ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, ஒற்றோபர் மாதம் 26 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 10.00** **தபாற் செலவு: ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, கண்டி அஸ்கிரிய பலிபான ஸ்ரீ சந்தானந்த சர்வதேச பௌத்த ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ.கூ. 13/2004*

**கண்டி அஸ்கிரிய பலிபான ஸ்ரீ சந்தானந்த சர்வதேச பௌத்த ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்**

*முன்னுரை.*

"பலிபான ஸ்ரீ சந்தானந்த சர்வதேச பௌத்த நிலையம்" மற்றும் பலிபான ஸ்ரீ சந்தானந்த பௌத்த ஆராய்ச்சி நிலையம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவனங்கள் இரண்டு அவற்றின் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்புபட்ட எல்லா நோக்கங்களையும் மற்றும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கை யில் கண்டியில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவனங்கள் எப்பல்வேறு குறிக் கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டுள்ள னவோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், கண்டி அஸ்கிரிய பலிபான ஸ்ரீ சந்தானந்த சர்வதேச பௌத்த அபிவிருத்தி நிலையம் என்ற பெயரின் கீழ் நிறுவனம் ஒன்றாக கூட்டிணைக்கப்பட விண் ணப்பித்துள்ளனவாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனு மதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக விருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, கண்டி அஸ்கிரிய பலிபான ஸ்ரீ சந்தானந்த சர்வதேச பௌத்த ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*கண்டி அஸ்கிரிய பலிபான ஸ்ரீ சந்தானந்த சர்வதேச பௌத்த ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கண்டி அஸ்கிரிய பலிபான ஸ்ரீ சந்தானந்த சர்வதேச பௌத்த ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தின் தற்போதைய உறுப்பினர் களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்

கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கண்டி அஸ்கிரிய பலிபான ஸ்ரீ சந்தானந்த சர்வதேச பௌத்த ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) கண்டி, அஸ்கிரிய மஹா விகாரையில் அமைந்துள்ள நூல் நிலையத்தையும் இரண்டு மாடி சமய மண்டபத்தையும் மற்றும் அவை அமைந்துள்ள காணியையும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களையும் பாதுகாத்தலும் பராமரித்தலும் அபிவிருத்தி செய்தலும் ;

(ஆ) பலிபான ஸ்ரீ சந்தானந்த பௌத்த ஆராய்ச்சி நிலையத்திற்கு முன்னரே சொந்தமானதும், கண்டி அஸ்கிரிய பலிபான ஸ்ரீ சந்தானந்த சர்வதேச பௌத்த ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்திற்கு தற்போது உரித்தாக்கப்பட்டுள்ளதுமான எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களையும் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும் நிருவகித்தலும் ;

(இ) பௌத்த தத்துவத்தை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் விரிவாக்குவதற்காக பௌத்த குருமார்களையும், பௌத்தர்களையும் பயிற்றுவித்தல் ; அத்துடன்

(ஈ) பௌத்த தத்துவத்தையும் அதனுடன் இணைந்துள்ள விடயங்களையும் கற்பதற்கு பௌத்தர்களை ஊக்குவித்தலும் அவர்களுக்கு உதவி வழங்குதலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக் கடனாகப் பெறவும் அல்லது திரட்டவும், மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதியை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் ஆகியவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** *(1)* கூட்டுத்தாபனத்தின் அலுவல்களானவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அமைவாக முகாமைச் சபையொன்றினால் நிர்வகிக்கப்பட வேண்டும். முகாமைச்சபை (இதனகத்துப்பின்னர் "தலைமைத் தேரர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கண்டி அஸ்கிரிய பலிபான ஸ்ரீ சந்தானந்த சர்வதேச பௌத்த ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் தலைமைத் தேரரையும் ; 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு இணங்கத் தெரிவுசெய்யப்பட்ட பணிப்பாளர், செயலாளர், பொருளாளர் அத்துடன் அத்தகைய வேறு குழு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*(2)* முகாமைச் சபையின் கூட்டம் ஒவ்வொன்றிற்கும் தலைமைத் தேரரே தலைமை தாங்குதல் வேண்டும். முகாமைச் சபையின் கூட்டத்திற்கு தலைமைத் தேரர் சமுகமளிக்காத சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

*(3)* இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமையவும் முகாமைச் சபையானது, முகாமைச் சபையின் கூட்டங்கள் சம்பந்தமாகவும் அக்கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் சம்பந்தமாகவும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகளை ஒழுங்குபடுத்தலாம்.

(4) முகாமைச் சபையின் செயல் அல்லது நடவடிக்கை முறை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருந்தமை அல்லது அதன் உறுப்பினர்களைத் தேர்ந்து எடுப்பதில் அல்லது பெயர் குறித்து நியமிப்பதில் ஏதேனும் குறைபாடு இருந்தமை காரணமாக மாத்திரம் செல்லுபடி அற்றதெனக் கருதப்படுதல் ஆகாது.

(5) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் நிறுவனத்தின் முகாமைச் சபையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு முகாமைச் சபையினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும், ஊழியர்களினதும், கடமையை நிறைவேற்றுவதற்காகவும், கூட்டுத்தாபனத்தினதும் முகாமைச் சபையினதும் கூட்டங்களிலான அலுவல்களைக் கொண்டு நடாத்துதலில், பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைகளைக் குறித்துரைத்தும் வேறுவகையாகவும் பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும், இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் விதி எதுவும் கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டிற்குக் குறையாத வாக்குகளை கொண்டிருந்தாலன்றி மாற்றப்படுதலோ, அதற்குச் சேர்க்கப்படுதலோ, திருத்தப்படுதலோ அல்லது இல்லாதாக்கப்படுதலோ ஆகாது.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும், கொடை, மரணசாதனக்கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை அல்லது கட்டணங்கள் என்ற வகையில் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் முகாமைச்சபை தீர்மானிக்க வேண்டியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) எங்கிருந்தாயினும்சரி பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனங்களும் இதன்கண் எடுத்துக் கூறப்பட்ட குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன் பாகம் எதுவும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்குலாபம், மிகையூதியம் அல்லது வேறுவகையில் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினருக்கு செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**8.** (1) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டதும் செலவு செய்யப்பட்டதுமான பணங்கள் எல்லாவற்றையும் பற்றிய சரியான கணக்குகளைப் பேணிவரச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் குறைந்தபட்சம் ஒவ்வொரு வருடத்திலும் ஒரு முறையாவது சோதனை செய்யப்பட்டுக் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், வருமான செலவினக் கணக்கினதும் ஐந்தொகையினதும் சரியான தன்மையானது, கூட்டுத்தாபனத்தினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

*நிறுவனத்தால் செலுத்தப் படவுள்ளனவும் நிறுவனத்திற்குச் செலுத்தப் படவுள்ளனவுமான கடன்கள்.*

**9.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிறுவகத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படற்பாலனவாகவுள்ள ஒப்பப்பணங்களும் உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**10.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது முகாமைச் சபையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், முகாமைச் சபையின் ஓர் உறுப்பினரதும் செயலாளரினதும் அல்லது முகாமைச்சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் முன்னிலையிலன்றி, எத்தன்மைத்தானதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதலும் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது, எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கலைப்பின்போது எஞ்சியுள்ள ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல், அதன் கடன்கள், பொறுப்புக்கள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதேனும் சொத்து எஞ்சியிருந்தால், அத்தகைய சொத்து கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது, ஆனால் அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்

கோள்களைக் கொண்டிருக்கும் வேறு நிறுவனங்கள் சிலவற்றிற்கு, அந்நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே ஏதாவது வருமானத்தை அல்லது சொத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின், கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் குழுவின் அல்லது கூட்டுத்தாபனத்தின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்